1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டபூர்வ பங்கீட்டு முறை அமலிலிருந்த சென்னை மாநகரில் 8 பங்கீட்டு வியாபாரிகளின் அனுமதியும், கோயம்புத்தூரில் 2 பங்கீட்டு வியாபாரிகளின் அனுமதியும் இதுவரை ரத்து செய்யப்பட்டன. சட்டபூர்வமற்ற பங்கீட்டு முறை அமலிலிருந்த ஏனைய மாவட்டங்களில் 56 பங்கீட்டுக் கடைக்காரர்களின் அனுமதி ரத்து செய்யப்பட்டன.

Supply of steel for Furniture Manufacturers

* 50 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether he has received a Memorandum, dated 2nd April 1970 from the Steel Furniture Manufactures Association, Coimbatore; and

(b) if so, the details thereof and the steps taken to ensure reghlar and proper sdpply of their steel requirements?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அவையின்முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: Sir, may I know whether it is a fact that many of these manufacturers are finding it difficult to go along with their work as they are not getting adequate quota and a number of people are likely to be thrown out of employment and if so, whether this Government have of late taken any drastic steps to see that they get the quota. Also, whether they will examine their grievances and do the needful in the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கவேண்டிய மூலப்பொருட்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை நம்முடைய அரசு உணர்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசாங்கமும் அடிக்கடி இதைபற்றிப் பரிசீலனை செய்து தேவையான மூலப்பொருட்களை, தேவையானல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு சிறு தொழிலதிபர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முன்வந்துள்ளது. அண்மையிலே 10 கோடி ரூபாய் அளவிற்கு நாடு முழுவதிலும் உள்ள சிறு தொழிலதிபர்கள் இரும்பு சம்பந்தப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்துகொள்வதற்கு அனுமதி அளித்திருப்பதை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, as far as the relief under the category of sales tax is concerned, our Government have denied their request. But what about the Central Excise Duty and which is the Government that are considering it, whether, it is our Government or that Government? If that Government is considering it—It is relevant—what is the exact reaction from the Central Government?

@ பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எக்ஸைஸ் வரியைப் பொறுத்த அளவுக்கு மத்திய சர்க்கார்தான் பரிசீலிக்கவேண்டும் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்து இருக்குமென்று நம்புகிறேன். அரசாங்கம் போடுகின்ற வரியை விட்டுக்கொடுப் பதிலே கொஞ்சம் தாமதமாகத்தான் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, நாற்காலி மேஜை களின் விலை இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக இரண்டு மடங்கு ஆகி 17 ரூபாயாக இருந்த நாற்காலியின் விலை 30 ரூபாய்க்கு ஏறி விட்டது. விலை ஏறியிருப்பதைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி மூலப் பொருட்கள் கிடைப்பதைப்பற்றியது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே இருக்கிறவர்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை இருந்தாலும் மின்சார வாரியம் போன்ற போர்டுகளிலே—அதிலும் தமிழ் நாட்டிலே 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்று முனைந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே—தேவையான இரும்புக் கம்பிகள் கிடைக்காத காரணத்தினலே, மத்திய அரசாங்கத்திடம் சொல்லியும் கிடைக்காத காரணத்தினலே, அந்த வாரியத்திற்கு அதிக மான இரும்புவேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றுத் தர நம்முடைய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு.செ. மாதவன்: அயர்ன் அன்ட் ஸ்டீல் மெட்டீரியல்ஸ் பொறுத்த அளவிற்கு மத்திய அரசாங்கம் போதுமான அளவுக்கு மூலப்பொருள்கள் தரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல மின்சார வாரியம் எடுக்கின்ற முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படாத அளவுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய சொந்தத் தொழிற்சாலைகளுக்குக் கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு இன்னும் பள்ளிகள், கல்லூரிகள் கட்டுவதற்குக்கூட அரசாங்கத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காத சூழ்நிலையை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவந்திருக் கிறோம். முதலமைச்சர் அளவிலேகூட நம்முடைய பிரதம மந்திரி அவர்களிடம் அடிக்கடி இதைப்பற்றிக் கூறப்பட்டு வருகிறது.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, மூலப்பொருட்கள் கிடைக்காத சமயத்திலே 1967–68, 1968–69-லே சிறு கைத்தொழிற் சாலைகளை நிறுவ மனுச் செய்தவர்களில் சென்னையிலே ஒரு பகுதிப் பேர்களுக்கு கோட்டாக் கொடுக்கப்பட்டும், ஒரு சிலருக்குக் கொடுக் காமல் இருந்ததும், அவர்கள் வழக்குமன்றத்திற்குக் கொண்டுபோய் நீதிபதி அவர்களும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப் பளித்தும், இதுவரையில் கொடுக்காமல் இருப்பதும் சர்க்காருக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் மனுச் செய்திருக் கிறார்கள் என்று நினைக்கிறேன், இதுசம்பந்தமாக தவறுதல் நடப் பதாக அரசாங்கம் கருதி நம்முடைய அதிகாரிகளை அனுப்பிப்

1970 நவம்பர் 28]

பரிசீலனை செய்தும் மறுபடியும் கூடக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்களுக்குச் சீக்கிரம் கிடைக்கச் செய்வதற்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் கூறியது என்ன விவரம் என்றே எனக்குத் தெரியவில்லை. ஒரு பகுதி, 2 பகுதி என்று சொன்னார்கள். எந்தப் பகுதி என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், (approved fabricators) என்று ஏற்கெனவே தொழில் செய்து கொண்டிருந்தவர்களை 'approved fabricators' என்ற கேடகிரி என்று கொடுத்து, அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. தொழில் நடத்தத்கூடிய வசதியோடு புதிதாக வருபவர்களுக்கு (Non-approved fabricators) என்று வைக்கப்படுகிறது. அவர்களும் கேட்கிறார்கள். தேவையான அளவிற்கு நமக்கு மூலப்பொருள்கள் கிடைத்தால் இந்தப் பிரச்சினையே எழாது என்று நான் கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மூலப்பொருள்கள் அனுமதிக்கப்படும் கோட்டாதாரர்கள், அந்தப் பொருள்களைக்கொண்டு உற்பத்திகளைச் செய்யாமல் அப்படியே விற்று விடுகிறார்கள் என்ற புகார்கள் வருகின்றனவே, அப்படி வரும் புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? இம்மாதிரி முறைகளினால் நமக்குக் கிடைக்க வேண்டிய கோட்டா சரிவரக் கிடைக்காமல் போகிறதே என்று சிலரிடமிருந்து புகார்கள் வருகின்றனவே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட புகார்கள் சில பேர்களால் சொல்லப்பட்டது. ஆனால் அதற்காக தப்பு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் விரும்புவார்கள் என்று நான் கருதமாட்டேன். காரணம், அப்படிச் சிலர் தொழில் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். ஒரே கட்டடத்திற்கு முன்னால் பல பெயர்கள் தொங்குகின்றன. அந்தக் கட்டடத்திலே ஒன்றுமே இல்லை. ஆனால் ஏராளமான பேர் கோட்டா வாங்கும் முறையில் வந்ததாக இந்த அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததன் காரணமாக விஜிலன்ஸுக்கு அனுப்பி அரசாங்கம் பரிசீலித்தது, பிறகு நடவடிக்கை எடுத்தது. கனம் அங்கத்தினர் அவர்கள், அவர்கள் பக்கம் போய்விடக்கூடாது.

கோவில்பட்டி வட்டத்தில் புவி இயல் ஆய்வு.

* 51 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில புவி இயல் ஆராய்ச்சிப் பிரிவினர் திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டித் தாலுக்காவில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், எப்போது, எந்தெந்த இடங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டது?

(உ) எங்கெங்கு என்னென்ன கனிப் பொருள்கள் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது?